[2020 மார்ச் 24

### (ஐ) மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்கள் அமைத்தல் மற்றும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடுதல் குறித்த தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில், 30 விழுக்காடு பங்களிப்பை அளித்து நாட்டின் வன்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மையமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை இத்துறையின்மூலம் தமிழ்நாடு செய்துள்ளதாக இந்திய மின்னணு தொழிற்சாலைகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், இத்துறை சுமார் 40 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கி வருகிறது. தகவல் தொழில்நுட்பத் துறைக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து பின்வரும் அறிவிப்புகளை வெளியிட விரும்புகிறேன்:

1. உலகெங்கும் உள்ள மின்னணு உற்பத்தித் தொழில்களின் முதலீட்டை தமிழ்நாட்டில் ஈர்க்கும் விதமாக, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் 4 இடங்களில் மின்னணு உற்பத்தி தொகுப்பு மண்டலங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைக்கும்.

2. பொது மக்கள் இணைய வழியில் பாதுகாப்பான பணப் பரிமாற்றம் செய்யவும், பல்வேறு தரப்பிலிருந்து தொடுக்கப்படும் இணையவழி தாக்குதல்களை எதிர்கொள்ளவும், பொது மற்றும் தனியார் தரவு உட்கட்டமைப்புகளைப் பாதுகாத்திடவும் வழிவகை செய்யும் "இணைய பாதுகாப்புக் கொள்கை" வெளியிடப்படும்.

### (ஒ) மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்குதல், சென்னை, சேப்பாக்கம் 'எழிலகம்' வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுதல், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்துதல், "தமிழ் நிலம்" மென்பொருள் உருவாக்குதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

1. நிருவாக வசதிக்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் விரைந்து சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தமிழ்நாட்டின் 38–வது மாவட்டமாக மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்படும்.

2. தமிழ்நாட்டின் 13 முக்கிய அரசுத் துறைகளின் துறைத் தலைவர் அலுவலகங்கள் சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள 'எழிலகம்' வளாகத்தில் செயல்பட்டு வருகின்றன. இப்பழமையான கட்டடத்தின் பராமரிப்புச் செலவு மிக அதிக அளவில் ஏற்படுகிறது. எனவே, அதே இடத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும். இக்கட்டடம் அருகில் உள்ள பாரம்பரிய கட்டடங்களுக்கு நிகராக கட்டப்படும்.

3. கடந்த ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட சங்கரன்கோவில், குடியாத்தம், ஸ்ரீபெரும்புதூர், வாணியம்பாடி மற்றும் அரக்கோணம் ஆகிய 5 கோட்டங்களுக்கு 16.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும். அதேபோன்று, திருவெண்ணைநல்லூர், கல்வராயன்மலை, கலவை, கே.வி. குப்பம், குன்றத்தூர், வண்டலூர் மற்றும் சோளிங்கர் ஆகிய 7 வட்டங்களுக்கு 28.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டப்படும்.

4. பழுதடைந்த வருவாய்த் துறை கட்டடங்களுக்கு மாற்றாக புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும் என்ற அடிப்படையில், சென்னை வடக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, செங்கல்பட்டு மற்றும் சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் 8.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும். அதேபோல, கள்ளக்குறிச்சி, ஆற்காடு, வாலாஜா, விளாத்திகுளம், திருச்செந்தூர், சாத்தான்குளம், பொன்னேரி, நன்னிலம், மன்னார்குடி மற்றும் குடியாத்தம் ஆகிய 10 வட்டாட்சியர் அலுவலகங்கள் 37.54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். மேலும், கறம்பக்குடி, பொன்னமராவதி, இராமேஸ்வரம், முதுகுளத்தூர், வாலாஜா, மேட்டூர், சேலம் (மேற்கு), தூத்துக்குடி, ஆம்பூர், திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி, திருவெறும்பூர் மற்றும் மணப்பாறை ஆகிய 14 வருவாய் வட்டாட்சியர்களுக்கு 4.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்புகள் கட்டித் தரப்படும். இது தவிர, 180 குறுவட்ட வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் 39.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டித் தரப்படும்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

5. 11–7–2017 அன்று இதே சட்டப் பேரவையில் நான் அறிவித்தபடி, பேரிடர்களின்போது மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தனியாக பேரிடர் மீட்புப் படை ஒன்று உருவாக்கப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை மேம்படுத்த, உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களைக் கொள்முதல் செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. சாதாரண மக்களும் எளிதாகக் கையாளும் வகையில், இணைய வழியாக நிலம் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களும் கிடைக்க வகை செய்ய "தமிழ் நிலம்" என்ற ஒரு மென்பொருள் உருவாக்கி, அனைத்து துறைகளும் ஒருங்கிணைக்கப்பட்டு, நில ஆவணங்களைப் புதுப்பித்தல், இணைய வழியாக சொத்து தொடர்பான வில்லங்க விவரங்கள் அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படும்.

7. நவீன நில அளவை கருவிகளான பூகோள நிலைக்கலன் கருவி மற்றும் மின்னணு நில அளவை கருவிகள் கொண்டு முன்னோடியாக கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முறையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த உத்தேசித்துள்ள நிலையில், முதற்கட்டமாக 40.96 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் நவீன நில அளவை கருவிகளைக் கொண்டு நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(ஓ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவுத் தொகை மற்றும் ஆதி திராவிடர் ஈமச் சடங்கு நிதியுதவியை உயர்த்துதல் உள்ளிட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும், உண்டி உறைவிட பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் பள்ளி